1. அரசருள் ஏறு போன்றவனுக்கு உரிய உறுப்புகள்
   - A) படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண்
   - B) தூங்காமை, கல்வி, துணிவுடைமை
   - C) இயற்றல், ஈட்டல், காத்தல்
   - D) அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம்

2. தமிழரின் வரலாற்றுக் களஞ்சியம்
   - A) புறநானூறு B) பதினெண்கீழ்க்கணக்கு
   - C) பதிற்றுப்பத்து D) அகநானூறு

3. நகுதற்பொருட்டன்று ________________ (கோடிட்ட இடத்தை நிரப்புக)
   - A) இடித்தல் B) நட்டல்
   - C) புணர்ச்சி பழகுதல் D) உடுக்கை இழத்தல்

4. ஏழாம் பத்தின் பாட்டுடைத்தலைவன்
   - A) இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்
   - B) இளஞ்சேரலிரும்பொறை
   - C) செல்வக்கடுங்கோ வாழியாதன்
   - D) ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்

5. கீழ்மக்களது ஆசாரமாக வள்ளுவர் கூறுவது
   - A) அச்சம் B) வெகுளாமை
   - C) உடுத்தல் D) உண்ணல்

6. பத்துப்பாட்டில் மிகச் சிறிய பாட்டு
   - A) மதுரைக்காஞ்சி B) முல்லைப்பாட்டு
   - C) மலைபடுகடாம் D) நெடுநல்வாடை

7. மதுரைக்காண்டத்தில் அமைந்துள்ள மொத்த காதைகள்
   - A) 30 B) 10 C) 7 D) 13

8. புறநானூற்று வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு பரிதிமாற் கலைஞர் இயற்றிய நாடகம்
   - A) தைப்பாவை B) மத்தவிலாசம் C) மானவிஜயன் D) ஓர் இரவு

9. பாட்டுடைத் தலைவன் பெயரால் அமைந்துள்ள நூல்
   - A) கூத்தராற்றுப்படை B) சிறுபாணாற்றுப்படை
   - C) பெரும்பாணாற்றுப்படை D) திருமுருகாற்றுப்படை

10. நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி இடையே நிகழ இருந்த போரைத் தடுத்து நிறுத்திய புலவர்
    - A) ஔவையார் B) கபிலர்
    - C) கோவூர்கிழார் D) பொய்கையார்

11. ஆற்றுப்படை இலக்கியத்தின் நோக்கம்
    - A) புரவலனை வழிநடத்துதல் B) இரவலனை வழிநடத்துதல்
    - C) குடிமக்களை வழிநடத்துதல் D) அரசவையை வழிநடத்துதல்

12. சிலப்பதிகாரம் தரும் 'இமிலே றெதிர்ந்த திழுக்கென வறியான்' என்ற அடி யில் இழுக்கென
அறியாதவன் என எவர் சுட்டப்படுகின்றார்?

A) மாசாத்துவாணிகன் B) பாண்டியமன்னன்
C) மாடலமறையோன் D) கோவலன்

13. காப்பியத்தில் நாட்டுப்பாடல்களைப் புனைந்தவர்

A) கம்பர் B) திருத்தக்கதேவர்
C) இளங்கோவடிகள் D) கூலவாணிக சாத்தனார்

14. பெருங்கதையின் மூலநூல் எழுதப்பட்ட மொழி

A) பாலி B) வடமொழி
C) பைசாசமொழி D) மலையாளம்

15. முதல் சமணக்காப்பியம்

A) சிலப்பதிகாரம் B) மணிமேகலை
C) சீவக சிந்தாமணி D) கொங்குவேள்மாக்கதை

16. 'சொல்லின் செல்வன்' எனப் பாராட்டப்படுபவன்

A) இலட்சுமணன் B) விபீடணன்
C) அனுமன் D) இராவணன்

17. 'ஓவியம் புகையுண்டதே' - இத்தொடரில் உள்ள புகை உண்ட ஓவியம் யார்?

A) சீதை B) மண்டோதரி C) கைகேயி D) திரிசடை

18. உழவாரப் படை ஏந்தி திருத்தொண்டு புரிந்தவர்

A) அப்பர் B) சம்பந்தர் C) சுந்தரர்
D) திருமூலர்

19. (I) மார்கழி நோன்பு நோற்கும் போது மேற்கொள்ளவேண்டியவை

(a) பரமனடிப் பாடுதல் (b) ஐயம் இடல்
(c) அதிகாலை நீராடுதல் (d) பிச்சை இடல்

(II) மார்கழி நோன்பு நோற்கும் போது நீக்கவேண்டியவை

(1) நெய் உண்ணாதிருத்தல் (2) பால் உண்ணாதிருத்தல்
(3) மலர் சூடல் (4) மையிட்டுக் கொள்ளாதிருத்தல்

A) a, 3 சரி B) b, 2 சரி C) d, 4 சரி
D) c, 1 சரி

20. தேம்பாவணியின் மொத்தப்பாடல்கள்

A) 3617 B) 3615 C) 3619 D) 3618

21. 'வளன்' என அழைக்கப்படுபவர்

A) சோசப் B) சான்
C) ஐசக் D) யோகனான்

22. செத்தும் கொடுத்த சீதக்காதி

A) நபி நாயகம் B) செய்யது காதர் மரைக்காயர்
C) அப்துல் மரைக்காயர் D) படிக்காசு புலவர்

23. சைவசமயக்குரவர்கள் எப்பெயரால் குறிப்பிடப்படுகின்றனர்

A) ஆழ்வார்கள் B) தொண்டர்கள்

C) பக்தர்கள் D) நாயன்மார்கள்

24. ஆய்வாளர்கள் ஆண்டாளின் காலத்தைக் கணக்கிட துணைநின்ற திருப் பாவை பாடலடி

A) வெள்ளி எழுந்து வியாழன் உறங்கிற்று
B) மார்கழித்திங்கள் மதி நிறைந்த நன்னாள்
C) கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி
D) கூற்றத்தின் வாய் வீழ்ந்த கும்பகருணனும்

25. 'பாட்டியல்' நூல்கள் என்பன

A) இலக்கண வகைமை பற்றியன B) காப்பிய வகைமை பற்றியன
C) உரைநடை வகைமை பற்றியன D) சிற்றிலக்கிய வகைமை பற்றி யன

26. 'பிரபந்தம்' என்ற சொல்லின் பொருள்

A) நன்கு கட்டப்பட்டது B) நன்கு கட்டப்படாதது
C) யாப்பு இல்லாதது D) பலதுறை சார்ந்தது

27. சங்ககாலத்தில் குறவஞ்சியரைச் சுட்டும் பெயர்

A) மூதின் மகளிர் B) நுளைச்சியர்
C) பருத்திப்பெண்டிர் D) அகவல் மகளிர்

28. உழவர்களின் வாழ்க்கையை விளக்கும் இலக்கியம்

A) கலசைக்கோவை B) இரட்டை மணிமாலை
C) முக்கூடற்பள்ளு D) முத்தொள்ளாயிரம்

29. கலிங்கத்துப்பரணியில் பேயின் மற்றொரு பெயர்

A) கூளி B) மோகினி C) கொற்றவை D) காளி

30. புதுவகை இலக்கியம் எவ்வாறு சுட்டப்படுகிறது?

A) வனப்பு B) விருந்து C) அந்தாதி
D) மந்திரம்

31. பொருத்துக:

(a) நூறுவெண்பாக்களால் பாடப்பெறுவது - (1) நீரோட்டக யமக அந்தாதி
(b) பதிக அமைப்பு உடையது - (2) சதகம்
(c) இதழ்கள் ஒட்டாமல் நூறுபாடல்களால் பாடப்பெறுவது - (3) வெண்பா அந்தாதி
(d) நூறுபாடல்கள் அமையப் பாடப்பெறுவது - (4) பதிற்றுப் பத்து

A) a-3, b-4, c-1, d-2 B) a-3, b-2, c-1, d-4
C) a-2, b-3, c-1, d-4 D) a-1, b-4, c-2, d-3

32. கீழ்வரும் பாடலின் அணியினை எழுதுக.

'யானே யாகி என்னலாற் பிறவாய்
யானும் அவையுமாய் இரண்டினும் வேறாய்'

A) உருவகம் B) விரோத அணி
C) சிலேடை D) வேற்றுமை அணி

33. முகமதி, மதிமுகம் என்பனவற்றின் அணிகள் தரப்பட்டுள்ளன. தேர்வு செய்க.

A) உருவகம், உவமை B) தன்மை, உவமை

C) உருவகம், பாவிகம் D) பாவிகம், உவமை

34. (1) பாரதியார் தனக்குச் சேவகம் புரிந்த குவளைக் கண்ணனை மனதில் கொண்டு கண்ணன் பாட்டு பாடினார். எனினும் கண்ணன் பக்தியும் காரண மாக அமைந்துள்ளது.
(2) ஆண்டான் - அடிமை உறவு கண்ணன் பாட்டில் இல்லை.

A) 1,2 சரி B) 1 மட்டுமே சரி
C) 2 மட்டுமே சரி D) 1, 2 சரியன்று

35. ஊழ்வினையின் வலியை வலியுறுத்தும் காப்பியம் -
A) மணிமேகலை B) சீவக சிந்தாமணி
C) சிலப்பதிகாரம் D) கம்பராமாயணம்

36. இயற்கையினூடே சமத்துவம் கண்ட கவிதை
A) தைப்பாவை B) அழகின்சிரிப்பு
C) குறிஞ்சிப்பாட்டு D) குயில்பாட்டு

37. மருமக்கள் வழி மான்மியம் தரும் சுவை
A) எள்ளல் B) உவகை
C) அங்கதம் D) இளிவரல்

38. ஆராய்ந்தெழுதுக.
(1) திரு.வி.கலியாணசுந்தரனார் உரைநடைத்திறன் மிக்கவர்.
(2) தனித்தமிழில் எழுதுபவர்.
(3) சிறந்த நாவலாசிரியர்.
A) 1, 3 சரி B) 1, 2, 3 சரி
C) 2, 3 சரி D) 1, 2 சரி

39. பொருத்துக:
a. கண்ணதாசன் - 1) கனக சுப்புரத்தினம்
b. கல்கி - 2) ரா. கிருஷ்ணமூர்த்தி
c. புதுமைப்பித்தன் - 3) முத்தையா
d. பாரதிதாசன் - 4) விருத்தாசலம்
A) a-3, b-2, c-4, d-1 B) a-2, b-3, c-1, d-4
C) a-3, b-2, c-1, d-4 D) a-4, b-3, c-2, d-1

40. புனலும் மணலும் மலையாள மொழிபெயர்ப்பில் வெளிவந்தது. அந்நூலின் பெயர்
A) நதி B) புழ
C) நதியும் மணலும் D) புழயும் மணலும்

41. அண்மையில் தமிழக அரசின் கலைமாமணி விருது பெற்ற திருவனந்தபுரம் எழுத்தாளர்
A) நீல. பத்மனாபன் B) ஆ. மாதவன்
C) ஜெயமோகன் D) எம். கே. நாதன்

42. அண்ணாமலைச் செட்டியார் நினைவு பரிசு பெற்ற நீல. பத்மனாபனின் படைப்பு
A) தலைமுறைகள் B) உறவுகள்
C) பள்ளிகொண்டபுரம் D) மின் உலகம்

43. முதியோர் கவனிப்பு குறித்துள்ள விழிப்புணர்வு புதினம்

A) சாய்வுநாற்காலி B) தலைகீழ் விகிதங்கள்

C) விஷ்ணுபுரம் D) இலையுதிர்காலம்

44. நவீனத்துவப் பார்வையினை இலக்கியத்தில் கையாண்டவர்

A) சுந்தரராமசாமி B) ஜெயகாந்தன்

C) புதுமைப்பித்தன் D) மௌனி

45. ஒரு சிறுகதை தந்த வாசகர் கடிதங்கள் ஒரு புதினம் உருவாகக் காரணமாயிற்று. புதினத்தின் பெயர் சிலநேரங்களில் சில மனிதர்கள். சிறுகதையின் பெயர் -

A) அந்தரங்கம் புனிதமானது B) சுயதரிசனம்

C) அக்கினி பிரவேசம் D) அக்கிரகாரத்துப் பூனை

46. எதன் அகரக்கிளவி ஈறு ஆகு அகரமுனைக் கெடுதல் வேண்டும்?

A) ஆறன் உருபின் B) எழுவாயின்

C) ஏழன் உருபின் D) விளி வேற்றுமையின்

47. ஐ, ஔ என்பனவற்றின் சாரியை

A) வற்று B) அத்து C) கான் D) இன்

48. பாவிகம் என்பது

A) காப்பியப் பண்பே B) வினையொடு தோன்றும்

C) மெய்யொடு தோன்றும் D) உருவொடு தோன்றும்

49. 'கரியது' - இதன் இலக்கணக் குறிப்பு

A) தெரிநிலை வினைமுற்று B) குறிப்பு வினைமுற்று

C) ஏவல் வினைமுற்று D) வியங்கோள் வினைமுற்று

50. 'உண்டே மறுமை' என்பதன் ஏகாரம்

A) தேற்றேகாரம் B) பிரிநிலை ஏகாரம்

C) ஈற்றசை ஏகாரம் D) இசைநிறை ஏகாரம்

51. பெண்ணின் பெருமை கூறும் பெண்ணின் படிநிலை வளர்ச்சி

A) பெண் - தாய் - தாய்மை B) தாய் - தாய்மை - இறைமை

C) பெண் - பெண்மை - தாய்மை D) பெண்மை - தாய்மை - இறைமை

52. எழுத்துக்களால் உருவாவது

A) அசை B) சீர் C) தளை D) அடி

53. <u>சுட்ட</u> சட்டி : கோடிட்ட சொல்லின் இலக்கணம்

A) பெயரெச்சம் B) வினையெச்சம்

C) இடைச்சொல் D) உரிச்சொல்

54. 'இருகை வேழத்து இராகவன் வந்தான்' என்ற தொடர் தரும் அணி

A) இரட்டுறமொழிதலணி B) பிறிதுமொழிதலணி

C) இல்பொருளுவமையணி D) வேற்றுமையணி

55. சீருக்கு உறுப்பாக அமைவது

A) அடி B) தளை

C) அசை D) பா

56. நன்றன்று - இது
A) மூவசைச்சீர் B) நாலசைச்சீர்
C) ஈரசைச்சீர் D) ஓரசைச்சீர்

57. மா முன் நேர் வந்தால்
A) நேரொன்றாசிரியத்தளை B) நிரையொன்றாசிரியத்தளை
C) இயற்சீர் வெண்டளை D) வெண்சீர் வெண்டளை

58. சொல்லின் இயல்பு
A) குறிப்பிற்தோன்றல்
B) தெரிபு வேறு நிலையல்
C) பொருண்மை தெரிதல்
D) பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்

59. நெடியான் என்பது
A) பண்புகொள் பெயர் B) வினைப்பெயர்
C) நிலப்பெயர் D) குடிப்பெயர்

60. வினையெனப் படுவது
A) வேற்றுமை ஏற்கும்
B) காலம் தோன்றாது
C) வேற்றுமை ஏற்கும் காலம் தோன்றாது
D) வேற்றுமை ஏற்காது காலம் தோன்றும்

61. மொழியில் காணப்படும் பொருளைக் காட்டும் சின்னஞ்சிறு கூறு
A) ஒலியன் B) உருபன் C) பொருளன் D) எழுத்து

62. மொழியியலின் முப்பெரும் பிரிவுகள்
A) ஒலியனியல், உருபனியல், தொடரியல்
B) ஒலியனியல், உருபனியல், விளக்கமொழியியல்
C) விளக்கமொழியியல், வரலாற்று மொழியியல், ஒப்பு மொழியியல்
D) ஒலியியல், ஒலியனியல், உருபனியல்

63. 'சங்கம்' என்ற சொல் முதலில் இடம்பெற்ற இலக்கியம்
A) மணிமேகலை B) சூளாமணி
C) வளையாபதி D) குண்டலகேசி

64. தமிழ்மொழியில் காணப்படும் திணை, பால், எண், இடம் ஆகியவற்றிற்கு அடிப்படையாக அமைவது
A) மூவிடப்பெயர்கள் B) ஆக்கப்பெயர்கள்
C) பதிலிடு பெயர்கள் D) பருப்பொருட்பெயர்கள்

65. அசைபு என்பது அசைவு என வருதல்
A) உறழ்ச்சி B) இதழ்ச்சாயல் பெறல்
C) மூக்கொலி மறைதல் D) ஒருங்கிணைவு

66. பார்வையை உணர்த்திய 'நோக்கம்' என்ற சொல் இன்று 'குறிக்கோள்' என்ற பொருளை உணர்த்துவது
A) பொதுப்பொருட்பேறு B) நுண்பொருட்பேறு
C) வன்பொருட்பேறு D) மென்பொருட்பேறு

67. தமிழகத்தில் வடமொழியை எழுதத் தொன்றுதொட்டு வழங்கிய எழுத்து

A) பிராமி B) நாகரி

C) கிரந்தம் D) வட்டெழுத்து

68. 'நசையொடு நோக்கடா எங்கும் உள்ளாள்' - பாரதிதாசன் கூறும் எங்கும் இருப்பவள் யார்?

A) அழகு B) இயற்கை

C) வானம் D) காற்று

69. ஒப்பிலக்கிய ஆய்வின் நெறிமுறைகளுள் ஒன்று

A) இணைநிலை ஆய்வு B) பகுப்பாய்வு

C) விளக்கமுறை ஆய்வு D) வரலாற்றுமுறை ஆய்வு

70. தமிழில் வெளிவந்த முதல் நாவல்

A) குளத்தங்கரை அரசமரம் B) பத்மாவதி சரித்திரம்

C) கமலாம்பாள் சரித்திரம் D) பிரதாப முதலியார் சரித்திரம்

71. அடிக்கருத்தியலை உருவாக்கியவர்

A) ரிமாக் B) ஹாலி லெவின்

C) பால்வான்தீகம் D) ரெனேவெல்லக்

72. தொல்காப்பியம் இலக்கியத்தை இரண்டாக வகைமைப்படுத்துகிறது

A) அகம், புறம்

B) இலக்கியம், இலக்கணம்

C) தற்காப்புக் கவிதை, பொருட்சார்புக் கவிதை

D) இயற்றமிழ், இசைத்தமிழ்

73. பாவின்று எழுந்த கிளவி

A) நாடகம் B) நாவல் C) உரைநடை D) கவிதை

74. உளவியல் அடிப்படையில் இலக்கியத்தை வகைமைப்படுத்துவதை விலக்கும் அறிஞர்

A) வைஸ்டைன் B) மேரிகெய்தர்

C) கதே D) பிளேட்டோ

75. அமைப்பியலாய்வின் தந்தை

A) லூர்து B) சக்திவேல்

C) விளாடிமிர் பிராப் D) கிரிம் சகோதரர்கள்

76. ஃபோல்க்லோர் என்ற சொல்லை உருவாக்கியவர்

A) வில்லியம் ஜான் தாமஸ் B) டாக்டர் வ. செ. குழந்தைசாமி

C) பம்மல் சம்பந்த முதலியார் D) மாத்யூ அர்னால்டு

77. கவிதையை மெருகுபடுத்தவும் வேறுபடுத்திக்காட்டவும் கையாளும் உத்தி

A) யாப்பு B) அணி C) படிமம் D) குறியீடு

78. கவிராட்சசன் என அறியப்படுபவர்

A) கம்பர் B) இளங்கோவடிகள்

C) ஜெயங்கொண்டார் D) ஒட்டக்கூத்தர்

79. ஈடு என்பது
A) செய்யுளின் உரை B) வைணவநூலின் உரை
C) சைவநூலின் உரை D) இலக்கணத்தின் உரை

80. இந்தியாவின் பழமையான தத்துவம்
A) ஐக்கியவாதம் B) வீரசைவம்
C) அத்வைதம் D) சாங்கியம்

81. ஆன்மநேய ஒருமைப்பாட்டுக் கொள்கையை வலியுறுத்தியவர்
A) இராமானுஜர் B) இராமலிங்க வள்ளலார்
C) அப்பர் D) சேக்கிழார்

82. இடைநிலைப்பாட்டு என்பது
A) கலிப்பாவின் உறுப்பு B) அகவற்பாவின் உறுப்பு
C) வஞ்சிப்பாவின் உறுப்பு D) வெண்பாவின் உறுப்பு

83. பாரதிதாசன் நடத்திய இதழ்
A) இந்தியா B) சுதேசமித்திரன் C) குயில்
D) தென்றல்

84. தமிழில் காணப்படும் பழமையான கல்வெட்டுக்களின் எழுத்து
A) பிராமி B) வட்டெழுத்து C) தேவரி D) கிரந்தம்

85. அற்றது பற்றெனின் உற்றது எது?
A) கல்வி B) வீடுபேறு C) செல்வம் D) இன்பம்

86. தனிநாயகம் அடிகள் தமிழ் எதன் மொழி எனக் கூறுகிறார்?
A) இலக்கிய மொழி B) இலக்கண மொழி
C) பக்தி மொழி D) அற மொழி

87. இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும் எனக் கூறுவது
A) திவாகர நிகண்டு B) பிங்கல நிகண்டு
C) சூடாமணி நிகண்டு D) ஆசிரிய நிகண்டு

88. தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை என அழைக்கப்படுபவர்
A) மறைமலை அடிகள் B) திரு. வி. கலியாண சுந்தரனார்
C) உ. வே. சாமிநாத ஐயர் D) டாக்டர் மு. வரதராசனார்

89. காவிய காலம் என்ற நூல் எழுதியவர்
A) பேரா. சுந்தரம் பிள்ளை B) பேரா. வையாபுரிப் பிள்ளை
C) க. நா. சுப்ரமணியம் D) வல்லிக்கண்ணன்

90. சதுரகராதியை உருவாக்கியவர்
A) வீரமா முனிவர் B) கால்டுவெல்
C) சீகன் பால்கு ஐயர் D) ராபர்ட் - டி - நொபிலி

91. சிலப்பதிகாரத்திற்கு முதலில் உரை தந்தவர்
A) பேராசிரியர் B) அடியார்க்கு நல்லார்
C) வேங்கடசாமி நாட்டார் D) உ. வே. சாமிநாதையர்

92. திராவிடமொழிகளில் ஒப்பிலக்கணத்தை முதலில் ஆராய்ந்தவர்

A) பெர்ஸிவல் பாதிரியார் B) ஜி. யு. போப்
C) கால்டுவெல் D) ராபர்ட் - டி - நொபிலி

93. பொருத்துக:
a. கண்ணதாசன் - 1. தாமரை
b. சி. சு, செல்லப்பா - 2. தீபம்
c. ப. ஜீவானந்தம் - 3. தென்றல்
d. நா. பார்த்தசாரதி - 4. எழுத்து
A) a-1, b-2, c-3, d-4 B) a-3, b-1, c-4, d-2
C) a-3, b-4, c-1, d-2 D) a-4, b-2, c-1, d-3

94. பெரிய புராணத்தின் காப்பியத்தலைவன்
A) அப்பர் B) சம்பந்தர்
C) சுந்தரர் D) மாணிக்கவாசகர்

95. தமிழில் வெளிவந்த முதல் இதழ்
A) தமிழ் மாகஸின் B) கல்கி
C) தென்றல் D) கடிதம்

96. தமிழரின் தாயகம் எனக் குறிப்பிடப்படும் நிலப்பகுதி
A) வட வேங்கடம் B) தஞ்சை
C) குமரிக் கண்டம் D) தர்மபுரி

97. தமிழர் நாகரிகத்தை அறிய உதவும் நூல்
A) தமிழ் இலக்கிய வரலாறு B) தொல்காப்பியம்
C) நன்னூல் D) வீரசோழியம்

98. தமிழில் எழுதப்பட்ட முதல் பௌத்த காப்பியம்
A) மணிமேகலை B) குண்டலகேசி
C) வளையாபதி D) உதயணன் காவியம்

99. கடிகை என்ற சொல்லின் பொருள்
A) அழகு நிலையம் B) கல்வி நிலையம்
C) நூல் நிலையம் D) சமயப் பள்ளி

100. ஆராய்ந்தெழுதுக:
a. யாப்பருங்கலக்காரிகை - 1. மயிலைநாதர்
b. நன்னூல் - 2. மணக்குடவர்
c. திருக்குறள் - 3. பெருந்தேவனார்
d. வீரசோழியம் - 4. குணசாகரர்
A) a-3, b-2, c-4, d-1 B) a-4, b-1, c-2, d-3
C) a-2, b-1, c-4, d-3 D) a-1, b-2, c-4, d-3

101. சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக்கிய பெண்மணி
A) ஔவையார் B) மணிமேகலை
C) கவுந்தி அடிகள் D) விமலையார்

102. ஆராய்ந்தெழுதுக:
1. தண்ணீர் கேட்டுத் தாமதமாய்ப் பெற்றதால் உயிர் நீத்தான் கணைக்கால் இரும்பொறை
2. கணைக்கால் இரும்பொறையை வென்றவன் பாண்டியன்
3. கணைக்கால் இரும்பொறை சேர அரசன்

4. கணைக்கால் இரும்பொறையின் மானத்தைச் சிறப்பித்துப் பாடியவர் ஔவையார் இவற்றுள்:

A) 2, 4 சரி　　B) 1, 3 சரி
C) 1, 4 சரி　　D) 2, 3 சரி

103. சித்தர் பாடல்கள் காட்டும் வழிபாட்டு நெறி
A) புறவழிபாடு　　B) அகவழிபாடு
C) உருவ வழிபாடு　　D) சாத்திர வழிபாடு

104. தமிழ்மொழியில் சொற்றொடர்கள் பெரும்பாலும் எதில் தொடங்கும்
A) எழுவாய்　　B) பயனிலை
C) செயப்படுபொருள்　　D) மூவிடப்பெயர்

105. 'எயினர்' என்பது யாரைக் குறிக்கின்றது
A) வேட்டுவர்　　B) உமணர்
C) வணிகர்　　D) கூவியர்

106. தமிழகத்தின் முதல் தலித் நாவல்
A) வெக்கை　　B) பிறகு
C) கருக்கு　　D) கரைந்த நிழல்கள்

107. யோகம், ஞானம், மருத்துவம், காயகற்பம் ஆகிய துறைகளில் நூல்களைப் படைத்தோர்
A) பாண்டியர்　　B) சோழர்
C) சித்தர்　　D) பல்லவர்

108. நந்தா விளக்கம் என்று அழைக்கப்படுவது
A) அகநானூறு　　B) பட்டினப்பாலை
C) புறநானூறு　　D) கலித்தொகை

109. திராவிட வேதம் என்ற பெயர் பெற்ற படைப்பு
A) பள்ளு　　B) தேவாரம்
C) நான்மணிக்கடிகை　　D) நாலாயிர திவ்ய பிரபந்தம்

110. கவிமணியின் முதல் படைப்பு
A) காந்தளூர்ச்சாலை　　B) பெண்ணின் பெருமை
C) ஆசிய ஜோதி　　D) அழகம்மை ஆசிரிய விருத்தம்

111. நடு திராவிட மொழி
A) தெலுங்கு　　B) துளு
C) குரூக்　　D) மால்டோ

112. 'துளு' எந்த மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மொழி
A) இந்தோ - ஐரோப்பிய மொழிக்குடும்பம்
B) ஆரிய மொழிக்குடும்பம்
C) ஆப்பிரிக்க மொழிக்குடும்பம்
D) திராவிடக் குடும்பம்

113. கிறிஸ்தவக் கம்பன்
A) எச். ஏ. கிருஷ்ணபிள்ளை　　B) வீரமாமுனிவர்
C) வேதநாயகம் பிள்ளை　　D) தத்துவப் போதகர்

114. சேவற்கொடியோன் உறையும் நிலப்பகுதி

A) குறிஞ்சி B) முல்லை
C) மருதம் D) பாலை

115. மகாமகோபாத்தியாயர் என்ற சிறப்பை பெற்றவர்

A) உ. வே. சாமிநாதையர் B) மறைமலையடிகள்
C) தியாகராச செட்டியார் D) தெ. பொ. மீனாட்சிசுந்தர
னார்

116. பாரதியார் பெண்களுக்காக நடத்திய பத்திரிகை

A) இந்தியா B) குடியரசு
C) சக்கரவர்த்தினி D) சுதேசமித்திரன்

117. திராவிட என்ற சொல்லை முதன் முதலில் கையாண்டவர்

A) எமனோ B) கைலாசபதி
C) குமரிலபட்டர் D) கால்டுவெல்

118. தமிழில் பஞ்சதந்திரக்கதைகளை எழுதியவர்

A) சேதுப்பிள்ளை B) கல்கி
C) தாண்டவராய முதலியார் D) புதுமைப்பித்தன்

119. குடிமக்கள் காப்பியம் எனும் திறனாய்வு நூலை எழுதியவர்

A) வேங்கடராஜீலு செட்டியார் B) சேதுபிள்ளை
C) திரு. வி. கலியாண சுந்தரனார் D) தெ. பொ. மீனாட்சி சுந்தர
னார்

120. சான்றோர் கூறும் உறுதிப் பொருட்கள் யாவை?

A) அறம், பொருள், இன்பம், வீடு B) அறம், பொருள், இன்பம்
C) அறம், பொருள் D) அறம்